**அனுப்புநர்:**

இல.கிருஷ்ணமூர்த்தி,

15/5, அண்ணாமலை தெரு

புழுதிவாக்கம், சென்னை 91

**பெறுநர்:**

**மதிப்பிற்குரிய அம்மா \ ஐயா**

பாரதிக்குப் பின்னால் அவருடைய நவீனக் கவிதைமுயற்சிகளை முன்னெடுத்துச் சென்று கடுமையான விமர்சனங்களுக்கும், கேலிகளுக்கும் மத்தியில் தமிழ் புதுக்கவிதை வடிவத்திற்கு அங்கிகாரம் பெற்றுத்தந்து, தமிழ்க்கவிதை உலகம் தற்கால உலக இலக்கிய அரங்கில் பேசப்படும் ஒன்றாக விளங்கப் போராடியவர் 'புதுக்கவிதைப் பிதாமகர் ந.பிச்சமூர்த்தி'.

திரு. ந. பிச்சமூர்த்தியின் இரண்டாவது மகள் திருமதி. இராஜலட்சுமி கணவரை இழந்து குடும்ப ஓய்வூதியத்தொகையில் வாழ்ந்துவருபவர். தற்போது சிறுநீரகம் செயல் இழந்து துன்பப்பட்டுவருகிறார். இரத்த சுத்திகரிப்பு ஒன்று மட்டுமே அதற்கான சிகிச்சை என்பதால் இரண்டு தினங்களுக்கு ஒருமுறை அதை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மரணத்தின் விளிம்பில் இருந்து மீண்டுவிட்டாலும் தொடர்ந்து சிகிச்ச்சையில்லை என்றால் அவரின் நிலை மோசம் அடைந்துவிடும் என்று மருத்துவர்கள் அறிவுருத்துகிறார்கள்.

வேறு ஆதரவின்றி அவரின் மகள் (என் மனைவி, ந. பிச்சமூர்த்தியின் பேத்தி) பராமரிப்பில் இருந்துவருகிறார். கணிதப்பட்டதாரியான நான் தனிப்பயிற்சி வகுப்புகள் நடத்துவதன் மூலமே என் வாழ்க்கையை நடத்திவருகிறேன். திருமதி. ராஜலட்சுமியின் மருத்துவ செலவுக்கு என் வருமானம் போதுமானதாகயில்லை.

தாயுள்ளம் கொண்டவராகிய தங்களைப் போன்றவர்கள், தங்களால் ஆன நிதியுதவியைச் செய்து, அவருடைய இறுதிநாட்களை அமைதியான முறையில் கழிப்பதற்குத் தேவையான உதவியை அருள்கூர்ந்து செய்யவேண்டும் என்று பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன். காசோலை மற்றும் பண உதவியை k.Bhuvaneshwari, என்ற பெயரில் மேற்கண்டமுகவரியில் அனுப்புமாறு கேட்ட்குக்கொள்கிறேன்.

இப்படிக்கு

இளசை. கிருஷ்ணமூர்த்தி